பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 19 புதன்கிழமை (01-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 126

# வடபகுதி மீதான பெருந்தாக்குதல்

# பிசுபிசுத்துப் போய்விடும் சாத்தியம்!

## படையினர் இழப்பும் விலகலும் இராணுவத்துக்குப் பெரும் தலையிடி

கொழும்பு, ஏப்ரல் 1

வடக்கில் — குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மீது — பெரும் எடுப்பிலான இராணுவத் தாக்குதலை நடத்துவதற்குப் பாதுகாப்புப் படையினர் போட்டிருந்த திட்டம் பிசுபிசுத்துவிட்டதாக அவதானிகள் கொழும்பில் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று மாதங்களில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களில் 450 க்கும் மேற்பட்ட துருப்புகள் பலியாகிவிட்டனர். அதன் விளைவாக ஏற்பட்ட மன அச்சம், மனத்தளர்வு ஆகியன காரணமாக ஆயிரக்கணக்கான இராணுவச் சிப்பாய்கள் லீவில் சென்று திரும்பாமல் விலகிவிட்டனர்.

இதனால் திட்டமிட்டவாறு வடக்கில் பெரும் எடுப்பிலான தாக்குதலை நடத்த முடியாது பாதுகாப்பு உயர் வட்டாரங்கள் பெரும் சங்கடமான நிலைக்குள்ளாகி இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகள் நடத்தி வரும் அதிரடித் தாக்குதல்களில் வடக்கு - கிழக்குப் போர் முனைகளின் முன்னணிப் பிரிவுகளில் பணி புரிந்தவர்களே இறந்துள்ளனர்.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## ★ 35 காவலரண்கள் தகர்ப்பு
## ★ 7 கனரக வாகனங்கள் நாசம்

# 3மாதங்களில் 50தாக்குதல்கள்

# 450 படையினர் உயிரிழப்பு!

ஜனவரி மாதம் முதல் நேற்று வரையான மூன்று மாத காலப்பகுதியில் விடுதலைப் புலிகளால் ஸ்ரீலங்கா படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட ஐம்பதுக்கும் மேற்பட்ட தாக்குதல்களில் 450க்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல்களில் 35 காவலரண்கள் தகர்க்கப்பட்டன; 7 கனரக வாகனங்கள் தகர்க்கப்பட்டன; கடற்படையினரின் நவீன ரக நீருந்து விசைப்படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளால் ஆர். பி. எல். பின் உதைபற்ற பீரங்கி ஒன்று, 50 கலிபர் துப்பாக்கிகள் இரண்டு, ஆர். பி. ஜி—7, ஏ. கே. ரக இலகு துப்பாக்கிகள் — 19 சுடுகுழல் துப்பாக்கிகள் 272 உட்பட ஏராளமான நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

கடந்த ஆண்டின் கடைசிக் காலாண்டில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் எண்ணிக்கையின் இரண்டு மடங்கு இதுவாகும்.

வவுனியா, மணலாறு, மட்டக்களப்பு, திருகோணமலை

[6ஆம் பக்கம் பார்க்க]

# இலங்கைக்கு ஆயுதம் வழங்க மேற்குலக நாடுகள் போட்டி!

## விடுதலைப் புலிகளுக்கும் "சாம்" ஏவுகணை?

கொழும்பு, ஏப். 1

தம்மிடம் உள்ள ஆயுதங்களை விற்பனை செய்யும் நோக்குடன் கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த தூதுக் குழுக்கள் இலங்கைக்கு அடிக்கடி விஜயம் செய்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

வல்லரசுகளின் ஆயுதக் குறைப்பு உடன்படிக்கை காரணமாக ஐரோப்பிய மரபுப் படைகளில் இருந்து பெருமளவு ஆயுதங்கள் அகற்றப்பட்டு கின்றன. அவற்றை இலங்கை உட்பட மூன்றாம் உலகநாடுகளுக்கு விற்பனை செய்வதில் முன்னாள் வார்சோ நாடுகளும் மேற்கு நாடுகளும் ஈடுபட்டு வருகின்றன என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆயுதங்களை மட்டுப்படுத்

[6ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



எச்சரிக்கையாக இருந்தா ... லினம் கவனம்... !

## பூநகரியில் குண்டு வீச்சு

தென்மராட்சி, ஏப். 1

நேற்றுக் காலை 6. 40 மணியளவில் பூநகரிப் பகுதியில் அவ்ரோ விமானம் ஒன்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது. பெரும் சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. [உ-117]

## கூட்டணியினர் இந்தியாவில்

கொழும்பு, ஏப். 1

கொழும்பில் தங்கியிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் எம். சிவசிதம்பரமும் ஏனைய கூட்டணி உறுப்பினர்களும் மீண்டும் இந்தியா சென்றுள்ளனர்.

இந்த விஜயம் அரசியல் நோக்கம் கொண்டது என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [உ-எ]

## எச்சரிக்கை!

யாழ்ப்பாணம் ஏப் 1

வாசகர்களே! இன்று எச்சரிக்கையாக இருங்கள். உங்களை ஏமாற்றுவதற்கும், புரளிக் கதைகளைக் கூறுவதற்கும் உங்கள் நண்பர்கள் கூடத் தயங்கமாட்டார்கள்;

அவர்கள் அவ்வாறு செய்தாலும் நீங்கள் எதுவும்செய்ய முடியாது... காரணம் இன்று ஏப்ரல் முதலாம் திகதி—ஏப்ரல் முட்டாள்கள் தினம்..! (அ)

## முல்லையில் ஊரடங்கு தளர்வு

கொழும்பு ஏப் 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் இன்று தொடக்கம் தினசரி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படும் என்று கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது.

மறு அறிவித்தல் வரை இரவில் ஊரடங்கு அமுலில் இருக்கும்.

இன்று ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ, விசேட பரீட்சைக்காகவே ஊரடங்கு தளர்த்தப்படுகிறது என கூட்டுப்படைகள் தலைமை அலுவலகம் அறிவித்திருக்கிறது. (உ-எ)

## சோலங்கி இராஜினாமா

புதுடில்லி. ஏப் 1

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி தமது அமைச்சர் பதவியை நேற்று இராஜினாமாச் செய்தார்,

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விசாரணையைத் தாமதப்படுத்தும்படி சுவீடனில் உள்ள போபர்ஸ் நிறுவனத்தை மாதவ்சிங் சோலங்கி கேட்டுக்கொண்டார் என்று குற்றச் சாட்டு வெளியானதை அடுத்தே அவர் ராஜினாமாச் செய்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## அஷ்ரப் அமைச்சராவார்

கொழும்பு, ஏப் 1

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப்பை அமைச்சராக்குவது பற்றி ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் ஆராயப்பட்டது.

முஸ்லிம் காங்கிரசின் உப தலைவரான ஜனாப் அபூபக்கரை துணை அமைச்சராக்குவது குறித்தும் ஆராயப்பட்டதாகவும்—

இந்த யோசனைகளை ஐ. தே. க. அமைச்சர்களான ஏ. ஆர். மன்சூர், எ. எச். எம். அஸ்வர் மற்றும் ஐ. தே. க. வின் எம். பி. அப்துல்கபூர் ஆகியோர் பலமாக எதிர்த்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## 185 பொதிகளில் தபால் வந்தது

யாழ்ப்பாணம், ஏப். 1

பருத்தித்துறை துறைமுகத்தை நேற்றுக்காலை வந்தடைந்த 'வில்லி' கப்பலில்185 தபால் பொதிகள், பாடசாலை மாணவர்களுக்கான பாடப்புத்தகங்கள் மற்றும் உணவுப்பொருட்கள் எடுத்து வரப்பட்டுள்ளன.

பருத்தித்துறையில் தரித்து நின்ற 'குமண' கப்பல் 24 பயணிகளுடன் திருமலை நோக்கி நேற்று மாலை புறப்பட்டது. கொழும்பில் இருந்து வரும் நோயாளருடன் குமண நாளை மீண்டும் பருத்தித்துறை வந்துசேரும். உ-3-165

## ஜி.சீ.ஈ. முடிவுகள் சில தினங்களில்

யாழ்ப்பாணம், ஏப். 1

1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த ஜி.சீ.ஈ. [சாதாரண] பரீட்சை முடிவுகள் இன்னும் சில தினங்களில் வெளியாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதே சமயம் 1990 ஆம் ஆண்டு டிசம்பர் பரீட்சைக்காக நடத்தப்பட்ட விசேட பரீட்சை முடிவுகள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. [உ-3]

## படையினர் சூடு; சிறுமி காயம்

யாழ்ப்பாணம், ஏப். 1

பூநகரி கல்முனை இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுக்கு மணியந்தோட்டம் பகுதியில் நித்திரையில் இருந்த சிறுமி இலக்காகி தலையில் காயமடைந்தார்.

வில்பிரட் மேரி ரஜீலா (வயது 11) என்ற சிறுமியே காயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் மாலை 5மணிமுதல் நேற்று அதிகாலை வரை மாறி மாறி ஷெல் மற்றும் துப்பாக்கித்தாக்குதல்கள் அரியாலை, மணியந்தோட்டம் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டன. உ-15

## அம்பாறையில் 20 தமிழர் கைது

யாழ்ப்பாணம், ஏப். 1

அம்பாறை மாவட்டத்தில் படையினர் கடந்த நான்கு நாட்களாக மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 20 தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

படையினருக்கும், சமூக விரோதக் கும்பல்களுக்கும் அஞ்சி காட்டு எல்லைகளுக்குள் ஓடி, அங்கு குடிசை அமைத்துத் தங்கியிருந்தோரே கைதாகினர். அவர்களின் குடிசைகளும் அழிக்கப்பட்டன. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமறைவான உடுகம்பொல பத்திரிகைக்குத் திடீர் பேட்டி

## தொலைபேசியில் தொடர்பு கொண்டார்

கொழும்பு, ஏப் 1

தலைமறைவாகியுள்ள முன்னாள் பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல கொழும்பில் உள்ள ஆங்கில வார இதழ் ஒன்றுக்கு தொலைபேசி மூலம் பேட்டி அளித்திருக்கின்றார்.

''தலைமறைவாக ஐந்து ஆண்டுகள் வரையும் நான் இருக்க முடியும். ஆனால் நீதிமன்ற உத்தரவை புறக்கணிக்க நான் விரும்பவில்லை. ஆகவே வெகு விரைவில் நான் நீதிமன்றத்தில் தெரிபட உள்ளேன்'' — என்று திரு. உடுகம்பொல அப்பேட்டியில் சொன்னார் என்று தெரிவிக்கப்படுகிறது.

திரு. உடுகம்பொலவை இம்மாதம் ஆறாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகும்படி மாளிகாகந்தை நீதிவான் உத்தரவிட்டிருப்பது தெரிந்ததே.

ஜனாதிபதி வழக்கறிஞர் ஒருவர் திரு. உடுகம்பொலவிற்காக ஆஜராவார் என்று தெரிய வருகிறது.

தலைமறைவாகியுள்ள திரு. உடுகம்பொலவைப் கண்டுபிடிக்க இரகசியக் பொலீஸார் சிறப்புக் குழு ஒன்றை நியமித்துள்ளனர்.

சட்டத்தரணி விஜேதாஸா லியனாராச்சி கொலை வழக்கு தொடர்பாக திரு. உடுகம்பொல மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் சாத்தியம் பற்றி சட்டமா அதிபரின் ஆலோசனையை நாடியிருப்பதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

லியனாராச்சி கொலை வழக்கில் மேல் நீதிமன்றம் அளித்த தீர்ப்பில், அக்கொலைச் சம்பவத்தில் திரு. உடுகம்பொல வகித்த பங்கு, முதல் இரு குற்றச்சாட்டுக்களைப் பொறுத்த மட்டில் பூரணமாகத் தவிர்க்கப்பட்டிருந்தது என்றும், அதனால் அந்த வழக்கில் முழு விவரங்களையும் வெளியிட அரச தரப்பு தவறிவிட்டது என்றும் கூறப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்தே மாளிகாகந்தை நீதிமன்றத்தில் திரு. உடுகம்பொலவுக்கு எதிராக பொலீஸார் புதிய வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தனர். இது பற்றி விசாரிக்கும்படி இரகசியப் பொலீஸாரை மாளிகாகந்தை நீதிவான் பணித்திருந்தார். அதனைத் தொடர்ந்தே உடுகம்பொல தலைமறைவானார்.

மனித உரிமை மீறலில் ஈடுபட்டதற்காக திரு. உடுகம்பொல கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது [இ-எ]


சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

**3 ஆவது ஆண்டு**
**டொனால்ட் கணேசகுமார்**
**வெற்றிக் கிண்ணம்**

**50 ஓவர் கிரிக்கெட் போட்டி**

போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் விவரங்களுக்கு:
233, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10-04-1992
பிரவேசக் கட்டணம்:- 250/-

அணி ஒழுங்குத் தேர்வு 15-04-1992 அன்று மாலை 4-00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

- சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்.

(4594)



கலை, வர்த்தகக் கல்லூரி
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கான
**கலந்துரையாடல்**

காலம்: 12-04-92 — 06-05-92 வரை
நேரம்: காலை 8-00 மணி

★ பொருளியல் ★ வணிக முகாமைத்துவம்
★ கணக்கியல் ★ தமிழ்
★ இந்துநாகரிகம் ★ அரசியல்

● முன் கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.
● நேர அட்டவணை காரியாலய ஊழியர்களைக் கருத்தில் கொண்டு வழங்கப்படும்.

[சி-1801] — நிர்வாகி.



**"சஞ்சீவி"** மரத்தளபாட விற்பனை நிலையம்,

★ **புத்தாண்டு** ★
**மலிவு விற்பனை**

இல்லத்தரசிகளே! உங்கள் இல்லங்களுக்குத் தேவையான
★ தையல் இயந்திரங்கள்
★ வீட்டுத் தளபாடங்கள்
போன்றவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

**"சஞ்சீவி"** மரத்தளபாட விற்பனை நிலையம்,
இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
[20295]


# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னம்மா மனுவேற்பிள்ளை

கரம்பொன்னை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்கு வீதியில் வசித்த வருமான திருமதி அன்னம்மா மனுவேற்பிள்ளை நேற்று [31-3-92] காலமானார்.

இவர் காலஞ்சென்ற சவரிமுத்து மனுவேற்பிள்ளையின் அன்பு மனைவியும், வஸ்தியாம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியர்] லில்லி அக்னஸ் [ஜெயம்], திருச்செல்வம் [துறைமுக அதிகாரசபை, கொழும்பு] ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா [பேபி ஆசிரியர்], ஜேம்ஸ், டெய்சி [யூடி - அச்சுவேலி] ஆகியோரின் அன்பு மாமியாரும் றஜீவன், ஜீவன், நிரோஜன், நிலக்சி, ரமணி ஆகியோரின் பேத்தியும், தர்சிகாவின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று [01-04-92] காலை 9.00 மணிக்கு புனித கொஞ்சேஞ்சி மாதாவின் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
ம. வஸ்தியாம்பிள்ளை [மகன்]
ஜெயம் ஜேம்ஸ் [மகள்]

(20317)

## திருமதி சிவக்கொழுந்து மகேஸ்வரி

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நெல்லியடியில் வசித்து தற்போது வண்ணார்பண்ணையில் வசித்தவருமாகிய சிவக்கொழுந்து மகேஸ்வரி 31-3-92 இல் சிவபதமடைந்துவிட்டார். இவர் காலஞ்சென்ற க. சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும், கதிர்காமநாதன் [பிரான்ஸ்], சிதம்பரநாதன் [ஜேர்மனி], இராஜேஸ்வரி, யோகேஸ்வரி [ஜேர்மனி], புஸ்பவதி [சுவிஸ்] ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரசேகரம் [உரிமையாளர், வேல்சன்ஸ், ஸ்ரான்லி றோட்], தியாகலிங்கம் [ஜேர்மனி], கனகரத்தினம் [சுவிஸ்], நிர்மலா புஸ்பராணி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியும், நாகலிங்கம், காலஞ்சென்ற தருமலிங்கம், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் புவனேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் கனிபராஜ், மீரா, குருசாந்த், மிதிலா, தர்மதா [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை இன்று 1-4-92 காலை 10.00 மணியளவில் 78, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
வி. சந்திரசேகரம்
[மருமகன்]

78, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[20310]

## திருமதி ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளை
(அமிர்தம்)

புங்குடுதீவு 12ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்பொழுது 767, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடத்தடி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான திருமதி ஆறுமுகம் நாகாத்தைப்பிள்ளை [அமிர்தம்] நேற்று சிவபதமடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், தீவக முன்னாள் மணியகாரர் கதிரவேலு அவர்களின் அருமைப் பேரனார் அமரர் கதிரவேலு - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்ற புவனேஸ்வரி [ஆசிரியை, யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்], கமலாம்பிகை [இளைப்பாறிய ஆசிரியை], யோகாம்பிகை, பாக்கியலெட்சுமி [ஆசிரியை], டாக்டர் பேரின்பநாதன் [மாவட்ட மருத்துவமனை, ஊர்காவற்றுறை], இராஜராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், த. துரைசிங்கம் [உதவி கல்விப் பணிப்பாளர், யாழ். கல்விக் கோட்டம்], க. கணேசன் [வர்த்தகர்], சு. இராமலிங்கம் [சிங்கர் கம்பனி முகாமையாளர்], த. சித்திரவேல் [கிராம சேவையாளர் - பதிவாளர், நிலாவெளி], நவமணி [நலன்பேண் உத்தியோகத்தர், மாவட்ட மருத்துவமனை, ஊர்காவற்றுறை], வி. தங்கராசா ஆகியோரின் மாமியாரும், மகேந்திரம் சிதம்பரப்பிள்ளை, மரகதம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் [வர்த்தகர், யாழ்ப்பாணம்], அருணாசலம் [வர்த்தகர்], நல்லதம்பி [வர்த்தகர், திருமலை], பரநிருபசிங்கம் [வர்த்தகர்], காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, காலஞ்சென்ற தம்பிஐயா, குணரெத்தினம் புனிதசுந்தரி ஆகியோரின் மைத்துனியும், லலிதாம்பிகை, மங்கையர்க்கரசி, கலைச்செல்வி [ஆசிரியை], கமலநேசன் [சுவிஸ்], குகப்பிரியா, இலங்கைநேசன் [சுவிஸ்], தவநேசன், சிவநேசன், நித்தியலெட்சுமி, சிவகுமார் [பிரான்ஸ்], சிவசங்கர் [பிரான்ஸ்], சுரேஸ்கரன், சிவப்பிரியா, அரிகரன், அனுசியா, சத்தியா ஆகியோரின் பேர்த்தியும், ஜனகன், சிவகௌரி ஆகியோரின் பூட்டியும், வைத்திலிங்கம் [கண்ணன் கபே, திருநெல்வேலி], குகநாதன் [பிரான்ஸ்], குணபூசனி, தர்மாம்பிகை [பிரான்ஸ்] ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
டாக்டர் ஆ. பேரின்பநாதன்
[மகன்]

767, மானிப்பாய் வீதி,
ஆறுகால்மடம்,
யாழ்ப்பாணம்.

[20315]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜி. சீ. ஈ. விசேட பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப் 1

ஜி. சீ. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை இன்று ஆரம்பமாகிறது.

இராணுவ நடவடிக்கைகளினால் கைது செய்யப்பட்டு விடுதலையானவர்கள் போன்றோர் உரிய காரணங்களைக் காட்டி அனுமதி அட்டையைப் பெற்று இன்று ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சையில் தோற்ற முடியும். இதற்காக பரீட்சை ஆணையாளரால் 150 தற்காலிக அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று நடைபெற்ற ஜி. சீ. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை தொடர்பான அறிவுறுத்தல் கூட்டத்தில் வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை காகிதாதிகள் குறைவாகவே விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் அதனால் பரீட்சார்த்திகள் காகிதாதிகளைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்றும் கல்விப் பணிப்பாளர் இக் கூட்டத்தில் கேட்டுக் கொண்டார்.

இப் பரீட்சை கிளிநொச்சியில் மூன்று நிலையங்களிலும், முல்லைத்தீவில் மூன்று நிலையங்களிலும் யாழ் மாவட்டத்தில் அறுபத்தாறு நிலையங்களிலும், கொழும்பில் ஒரு நிலையத்திலும் இன்று ஆரம்பமாகிறது.

சுமார் பத்தாயிரம் மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுகின்றார்கள்.

இவர்களில் ஒருவர் கண் பார்வை அற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

[இ-118]

## பழுதடைந்த தளபாடங்கள்: திருத்திப் பயன்படுத்த முடிவு

பருத்தித்துறை, ஏப். 1

வடமராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலைகளிலுள்ள பழுதடைந்த தளபாடங்கள் இடம் பெயர்ந்துள்ள மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகளுக்கு வழங்கப்பட உள்ளன.

வடமராட்சி கோட்டக் கல்வி அதிகாரி திரு. ச. செல்லத்துரை இவற்றைப் பொறுப்பேற்று வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. கேதீஸ்வரனிடம் கையளிக்க உள்ளார்.

[இ-181]

## அவர்களுக்கும் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 1

மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்துக்கு நேரில் செல்ல முடியாத யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அப் பரிசு வழங்கப்படுமெனத் தம்மிடம் தெரிவிக்கப்பட்டதாக யாழ். அரச அதிபர் கே. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து இங்கு தகவல் அனுப்பியுள்ளார்.

மாத்தளையில் நடைபெறும் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள யாழ். பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட எண்ணிக்கையான மாணவர்கள் மட்டுமே அங்கு சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. [அ-5]

## தி. மு. க. உறுப்பினருக்கு தடை விதிப்பு!

சென்னை, ஏப். 1

தமிழக சட்டசபையின் பட்ஜெட் கூட்டத் தொடர் முடிவடையும் வரை சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ளக்கூடாது என்று தி. மு. க. உறுப்பினர் பரிதி இளம்வழுதி மீது தடை உத்தரவு விதிக்கப்பட்டது.

உப சபாநாயகரின் ஆணையை மீறி சபை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் விளைவிக்க முயன்றதாக பரிதி இளம் வழுதி மீது குற்றஞ்சாட்டப்பட்டது.

விசாரணையின் பின்னர் சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா, தடை உத்தரவைப் பிறப்பித்தார். (உ-எ)

## அனைத்துக்கட்சிகள் மாநாடு செயலிழந்து போகும் நிலை

கொழும்பு, ஏப். 1

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டின் எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது

இம்மாநாட்டைத் தொடர்ந்து நடத்துவது குறித்து எந்த அரசியல் கட்சியும் அக்கறை காட்டுவதாக இல்லை என்று, மாநாட்டில் கலந்து கொண்டு வரும் சிலர் கருதுகின்றனர் என கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அனைத்து அரசியல் கட்சிகள் மாநாடு நீண்ட விடுமுறையில் செல்ல திட்டமிட்டுள்ளதா என்று பத்திரிகையாளர் கேட்ட கேள்விக்கு ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கூன் பதில் அளிக்கையில், ''உண்மையில் அப்படி அல்ல அனைத்துக்கட்சி மாநாடு தனது வேலையைச் செய்துள்ளது. அரசியல் சாசனத்தில் செய்யப்படவுள்ள 17 ஆவது திருத்தம் மற்றும் மனித உரிமை ஆணைக்குழுச் சட்ட மூலம் ஆகியன பற்றி மாநாடு ஆராய்ந்து முடிவெடுத்துளளது. விரைவில் அவை அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும். சிங்கள—தமிழ் புத்தாண்டை ஒட்டிய விடுமுறைக் காலத்தில் மாநாடு கூடாது''— என்று சொன்னார். (இ-எ)

## இலங்கை வங்கி விசேட கருமபீடம்

யாழ்ப்பாணம், ஏப். 1

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவத்தையொட்டி இலங்கை வங்கி மானிப்பாய்க் கிளையின் விசேட கருமபீடம் ஒன்று இம்முறையும் ஆலய முன்றலில் இயங்கி வருகிறது.

(இ)

---

உ

சிவமயம்

## பாஷாண உத்வாஸன சபிண்டீகரண அழைப்பு

மண்ணில்: 30 — 07 — 1917



விண்ணில்: 22 — 03 — 1992

திருமதி

### யோகாம்பிகை தியாகராசாக்குருக்கள்

கடந்த 22 - 03 - 92 இல் சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவி திருமதி யோகாம்பிகை தியாகராசாக் குருக்கள் அவர்களின் பாஷாண உத்வாஸனக் கிரியை எதிர்வரும் பங்குனித்திங்கள் 20 ஆம் நாள் வியாழக்கிழமை (2-4-92) அதிகாலை 6 மணியளவில் அன்னாரது வன்னிச்சி அம்மன் சோவிலடி இல்லத்தில் நடைபெற்று வல்வெட்டித்துறை ஊறணி தீர்த்தக் கரையில் சமுத்திரத்துடன் சங்கமமாக்கப்படும்.

அன்று நண்பகல் அவரது இல்லத்தில் சபிண்டீகரணக் கிரியை நடைபெறும்.

இக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எம்முடன் இணைந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் — திரு. தி. நாகேஸ்வரன் குடும்பத்தினர், [பங்காளர், ரவிலங்கா ரேட்ஸ்-கொழும்பு]

மகள் — திருமதி தி. நாகபூஷணி அம்மா குடும்பத்தினர்,

மருமகன் — திரு. சே. நேசரெத்தினம் குடும்பத்தினர்,

மருமகன் — சிவ ஸ்ரீ. சோ தண்டபாணிக தேசிகர் J.P. குடும்பத்தினர், [பிரதமகுரு, வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், வல்வெட்டித்துறை].

'' அன்னை இல்லம் '',
வன்னிச்சி அம்மன் கோவிலடி,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.

[20308]

விக்னா கல்வி நிறுவனம்
G. A. Q.
யாழ். பல்கலைக்கழக வெளிவாரி
பொருளியல்
திரு. க. கலாகரன்
பிரித்தானிய வரலாறு 3 மணி
பொருளியல் கொள்கைகள் கோட்பாடுகள் 4-30 மணி
ஆரம்பம்: 03 — 04 — 1992 [வெள்ளி]
[சி-1805]

நிரு ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.
A/L 93
ஆள் கூற்று கேத்திர கணிதம்
ஆரம்பம்: 05 — 04 — 1992
திரு. கமலசிங்கம்
[சி-1804]

திருநெல்வேலியில்
★ ஓர் மாபெரும் மலிவு விற்பனை ★
01-04-92 தொடக்கம் 05-04-92 வரை
தமிழீழ மக்களுக்கு-
தமிழீழத்தின் தனி மலிவு விற்பனை
★ ரெடிமேட் ஷேர்டிங்
★ சூட்டிங் மற்றும்
★ சிறுவருக்கான ரெடிமேட் ஆடைகளையும்
★ நவநாகரீக மங்கையர்க்கான சகலவிதமான ஆடைகளையும்
ஒரே முறையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய முகவரி:
'புதிய தாரகை புடைவை மாளிகை'
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
[20298]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: 04 — 03 — 1924



மறைவு: 03 — 03 — 1992

அமரர்

### காசியர் ஆசைப்பிள்ளை

(பிரபல வர்த்தகரும், முன்னாள் கிராமசபை - உறுப்பினரும், அச்சுவேலி)

அன்பு ஐயா! காலமெலாம் கண்ணின் மணிபோல் எம்மைக் காத்தீர்! உம் நினைவுகள் கனவாகிப் போனதோ! எம் நெஞ்சங்கள் குமுறுதையா! திடீரென எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத் துயில் கொண்ட அன்பு ஐயாவின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி, பல வழிகளிலும் உதவி ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாளை (2-4-1992) வியாழக்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, மகன்.

''திருத்தணிகை'',
அச்சுவேலி தெற்கு

[20273]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனையாகின்றது

ஏப்ரலில் நடைபெறவிருக்கும் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான, துரித மீட்டல் வினா-விடைப்பயிற்சிகள் கணிதம் 5 வினாத்தாள்கள், தமிழ் 5 வினாத்தாள்கள். ஆக்கம்: திருமதி ப. இளங்கோ. [உடுவில் மகளிர் கல்லூரி] வெளியீடு: சோதி வெளியீட்டு வாரியம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

[சி/1742]

## மலிவு விற்பனை

1992 ஆம் ஆண்டுக்கான திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டர், டயரிகள் மலிவு விலையில் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. அன்பளிப்புச் செய்யும் நிறுவனங்களுக்கு விசேட கழிவுண்டு. திருக்கணிதம், சாவகச்சேரி.

[சி-1755]

## தவறிவிட்டது

30-3-92 அன்று இரவு பரமேஸ்வராச் சந்திக்கும், சுண்டிக்குளிக்கும் இடையில் க. தபோஜனின் அடையாள அட்டை மணிபேர்ஸுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தாஸன் மதுபானச் சாலை, பலாலி றோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு தயவு செய்து அறிவிக்கவும். [20307]

## இலவச திருமண சேவை

35 வயது, கேட்டை, சங்கீதம் படித்தவருக்கு மணமகன் தேவை. உள்நாடு வெளிநாடு நிர்வாகத்தரம் விரும்பத்தக்கது. தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4588]

வயது 24, திருவாதிரை, செவ்வாய் 1, சைவப் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. கனடாவில் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். நேரடித் தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4589]

வயது 30, மிருகசீரிடம், செவ்வாய் 4, U-K இல் வேலை செய்யும் பெண்ணுக்கு தகுந்த மணமகன் U-K இல் தேவை. தொடர்பு ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [4593]

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[4578]

## பொது அறிவு நூல்

கிராம சேவை அலுவலர் — ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தெரிவுப் பரீட்சைகள் - 1992 ஆகியவற்றுக்கு உகந்த பயனுள்ள நூல் — தொகுப்பாசிரியர்: த. ந. பஞ்சாட்சரம். விலை ரூபா 60/-. சகல முன்னணிப் புத்தகசாலைகளிலும் கிடைக்கப்பெறும்.

[சி/1690]

## மாதிரி வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(4577)

---

For the accurate dispensing of your prescribed pair of spectacles and same day service contact

**ERIC GANESH**
**(OPTICIANS)**
**566, Hospital Road, Jaffna**

Where several varities of Imported Frames, Lenses & Photogray Sunglasses are available for Selection

[4592]

---

காரைநகர் — மணற்காடு
ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அன்னையின்

## தேர் உற்சவ தினம்

1992-04-01 புதன்கிழமை [இன்று]

**எப்பொழுது எமை அழைப்பாய்!**

எழில் பொங்கும் ஈழத்தின் அருள்மிகு அன்னையே!
தொழில் கொள்ளும் மானிடர் தொழுதேற்றும் - தேவியே!
முகில் வண்ணன் முறை காணும் முத்து மாரித்- தங்கையே!
பொழில் நிறைந்த காரை பொற்பதிக்கு எப்பொழுது- எமை அழைப்பாய்

— ஆசிரியர் காரை. எம். பி. அருணானந்தன்.

[சி-1754]

---

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## லெப்டினன்ட் மயூரன் (பபி)

**(இ. செல்வக்குமார்)**

தாயக மண்ணில்: **03 — 07 — 1962**
தமிழ்த் தாய் மடியில்: **01 — 04 — 1987**

திதி: 05 — 04 — 1992

ஈழம் வாழ்தமிழ் மாந்தர்தம் மனதினில்
இலங்கிடும் பெரும் சுடராய்
இன்தமிழ் மாதிவள் கரங்களில் ஏற்றதோர்
விலங்கினைத் தான் களைய
போர்க்களம் சென்றொரு பொறையினை நாட்டிட
பொற்றமிழ் மைந்தன் இவன்
பொற்புறும் தன்னின மீட்சிகள் தேடியே
பொன்னெனத் தன் கரத்தில்
''சினைப்பராம்'' சீரிய ஆயுதம் கொண்டொரு
சிந்தையில் கலக்கம் இன்றி
சீர்மிகு ஈழமாம் தாயக வாழ்வினில்
சிறப்பொடு தான் கலந்தே
ஆண்டுகள் ஐந்தது ஓடி மறைந்தது
அவலங்கள் தீர வில்லை
ஐயனே! உன்நினை வாகவே இன்றுநாம்
அஞ்சலி செய்கிறோம் காண்.

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்:

**அப்பா, அம்மா, அண்ணாமார், அண்ணிமார், சகோதரிமார், மைத்துனர்மார், பெறாமக்கள், மருமகன், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

கி. இராசரட்ணம்,
மயூரன் வீதி,
மல்லாகம்.

[20272]

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மோட்ச தீப அழைப்பு

தோற்றம்: **06 - 10 - 1920**

மறைவு: **17 - 03 - 1992**



## துரையப்பா பத்தர் வேணுகோபால்

நிகழும் பிரசோற்பத்தி பங்குனிமாதம் 4 ஆம் நாள் 17-3-1992 காலை 10-42 மணியளவில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மோட்ச தீப கிரியையும் வீட்டுக்கிருத்தியமும் நிகழும் பங்குனி மாதம் 19 ஆம் நாள் இன்று புதன்கிழமை நடைபெறும். அன்னாரின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்ட யாவருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்த அன்புள்ளவர்களுக்கும் மற்றும் எல்லா வழிகளிலும் உதவி நல்கிய நல்லோருக்கும் நன்றி நவில்கின்றோம்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும்தெரிவித்துக் கொள்கிறோம்.

**திருமதி வேணுகோபால் கனகவல்லி, பிள்ளைகள்.**

33, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(4591)

---

## முதற்சிரார்த்த நினைவஞ்சலியும் அழைப்பும்

செந்தமிழ்ப் பரப்பில்: **12 — 08 — 1930**

அந்தகன் புரப்பில்: **14 — 04 — 1991**



## திருமதி தங்கராசா கனகாம்பிகை

திதி: 01—04—1992

ஆண்டொன்று கடந்ததுன்றன் அருமைமுகம் மறையவில்லை
தூண்டுசுட ரொளிவிளக்காய்ச் சொலிக்கின்ற தெங்குமென்றும்
மாண்டுமடித் தகலவில்லை வாழ்கின்றாய் எம்மிடையே
பூண்டுசெடி கொடிமரமும் புலப்படுத்தும் நினதுருவை.

அன்புமொழி சொரிந்திருந்தாய் அதுசெவியி லொலித்திடுதே
இன்பொழுகப் பயின்றிருந்தாய் இதயத்தினு மினித்திடுதே
என்புருகச் செயற்பட்டாய் எவருளமும் நெகிழ்ந்திடுதே
பன்னருஞ்சீ ருளதாயே பாரிலுனக் கார்நிகரே.

**கணவன், பிள்ளைகள், மருகர், மருகியர், பேரப்பிள்ளைகள்.**

சந்தை வீதி,
உடுப்பிட்டி.

(20297)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மனம் திறந்து பேசலாம்

இந்த நாட்டில் வாழும் சகல மக்களுக்கும் அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். அதனை விடுத்து நிபந்தனைகளை விதித்துக் கொண்டிருப்பது சமாதானத்துக்கு ஊறு விளைவிப்பதாகும் —

பல்லின மக்கள் வாழும் இந்த நாடு சகல மக்களுக்கும் சொந்தமானது. இதனை அனைவரும் உணர வேண்டும் —

யாழ்ப்பாணம் வரவிருக்கும் பௌத்த குருமார் நல்லெண்ணத் தூதுக் குழுவிக்குத் தலைமை வகிக்கவுள்ள வண. பலப்பிட்டிய சித்தார்த்த தேரர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இவரைப் போலவே பௌத்த குருமாரில் ஏனைய பலரும் சமய தர்மப்படி, அறத்தின் வழி நின்று சிந்திப்பவர்கள் உளர். ஆனால்......

செல்வாக்குள்ள உயர்மட்டத்தைச் சேர்ந்த பௌத்த குருமாரும், ஏனைய 90 சதவீதமான பௌத்த குருமாரும் இந்த நாட்டையும் அதன் அரசியலையும் வேறு விதமாகப் பார்ப்பவர்களாகவே உள்ளனர்.

இந்த நாடு சிங்கள பௌத்த நாடு. ஏனைய இனங்களைச் சேர்ந்த மக்கள் சிறுபான்மையினர். ஆகையால் அவர்களுக்கு சிங்கள மக்களுக்குள்ள உரிமைகளை வழங்க முடியாது. குறைந்த சலுகைகளை மட்டுமே வழங்கலாம். சிங்கள மக்கள் விரும்பிக் கொடுப்பதை சிறுபான்மையினர் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான் — இத்தகைய சிந்தாந்தமும் கோட்பாடும் துவேசப் போக்குமே பௌத்த குருமாரில் 90 சதவீதத்தினரின் மனங்களில் குடி கொண்டுள்ளன.

கடந்த நாற்பது வருடங்களாக இந்நாட்டின் இனப் பிரச்சினை தீராமல் நீடிப்பதற்கு பௌத்த குருமாரின் மேற்சொன்ன எண்ணப் போக்குகளும், அவர்கள் அரசியல் மீது செலுத்தும் செல்வாக்கும், மேலாண்மை நிலையுமே காரணங்கள் எனலாம்.

இவ்வருட ஆரம்பத்தில் கூட, அமைச்சர் தொண்டமான் தயாரித்த தீர்வுத் திட்டம் அரும்பிலேயே கருகி விழுவதற்கு காரணமாக இருந்தவர்கள் — பின்னணியில் இருந்தவர்கள்— பௌத்த மகா சங்கத்தினர் என்பதில் சந்தேகமே இல்லை

புத்தபெருமானின் போதனைகளை மறந்து, அவற்றுக்கு நேர்மாறாகச் செயற்படும் தெற்கின் பௌத்த மகா சங்கம் என்ற பெரும் சமுத்திரத்தில் பலப்பிட்டிய சித்தார்த்த தேரர் போன்ற சிறுதுளியினரால் பெரும் மாற்றத்தைச் செய்ய இயலுமா என்பது கேள்விக்குரியது.

எனினும்—

தமிழ் மக்களின் நிலையை, போரின் அனர்த்தங்களை அந்த அனர்த்தங்களின் மத்தியிலும் தமிழ் மக்களுக்குள்ள விடுதலை உணர்வை இவர்களும் புரிந்து கொண்டு—

அவற்றையே தமது தூதாக, செய்தியாக தெற்கில் தெரிவிப்பார்களானால் பௌத்த சங்கத்தின் மனதை மாற்றும் ஓர் ஆரம்ப (சிறு) முயற்சியாக அமையலாம்; அவ்வளவுதான்!

ஒன்றுமில்லாதிருப்பதை விட சொற்பமாக இருந்தாலும் பரவாயில்லை என்பார்கள். அந்த வகையில் இந்த முயற்சியை தமிழ்மக்கள் வரவேற்பர். பௌத்த குருமாரின் நல்லெண்ணத் தூதுக்குழுவுக்கு வேண்டிய சகல ஒத்துழைப்பும் கிடைக்கும். தூதுக்குழுவினர் தமிழ்மக்களுடனும், விடுதலைப் புலிகளுடனும் மனம் திறந்து பேசலாம்.

# விவசாய, கைத்தொழில் துறைகளில் புதிய சகாப்தத்தை நோக்கி...

## கண்காட்சியைக் கண்டதும் நம்பிக்கை பிறக்கிறது

**- இளநேசன் -**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அபிவிருத்தி நிலையம் ஏற்பாடு செய்திருந்த உள்ளூர் உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் கடந்த மாத ஆரம்பத்தில் யாழ். இந்துக்கல் லூரியில மூன்று தினங்கள் நடைபெற்றன.

தமிழீழத்தின் சுய பொருளாதார மேம்பாட்டிற்கு உழைத்து வரும் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளாலும் உற்பத்தி செய்யப்பட்ட — உருவாக்கப்பட்ட — ஏராளமான பொருள்கள் அதில் இடம் பெற்றிருந்தன.

அவை தவிர நெருக்கடிகளுக்கு மத்தியில், நெருக்கடிகளையே சவாலாக கொண்டு இயங்கி வரும் இருபதுக்கும் மேற்பட்ட உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்திகளும் அந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டனர். அந்தந்த நிறுவனங்களைச் சார்ந்தவர்கள் தத்தமது உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதிலும், அவை பற்றிப் பார்வையாளர்களுக்கு விளக்கமளிப்பதிலும் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர்.

### உமியிலிருந்து சிமெந்து

கண்காட்சியின் ஒரு பகுதியில் தமிழீழ ஆய்வு நிறுவனத்

**கண்டதும் கேட்டதும்**

தின தேசநிர்மாணிகளால் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த ''கொங்கிறீட்'' பாளம் ஒன்று பார்வையாளர்களது கவனத்தை ஈர்த்தது.

உள்ளூரில் தயாரிக்கப்பட்ட சிமெந்தினால் உருவாக்கப்பட்ட ''கொங்கிறீட்'' பாளம் அது என்பதை முதலில் நம்புவதற்கும் பலர் மறுத்தனர்.

சாதாரண காட்டுக்கல், சூளை ஒன்றில் இடப்பட்டு சுமார் 45 நிமிடங்களுக்கு வெப்பமேற்றப்படுகிறது அது நீறாகி மென்மையான பதத்தை அடைந்ததும், குறிக்கப்பட்டளவு சுண்ணாம்பு, உமிச்சாம்பல் என்பனவற்றுடன் கலக்கப்படுகிறது. அவ்வளவு தான் அருமையான — உறுதியான — சிமெந்து எமக்குக் கிடைத்து விடுகிறது—இவ்வாறு பார்வையாளர்களுக்கு விளக்கப்படுகிறது.

சாதாரண சுண்ணாம்பு, காட்டுக்கல், உமிச்சாம்பல் இவற்றில் சிமெந்து உருவாகுமா எனச் சந்தேகம் கொண்டவர்களுக்கு அதன் தயாரிப்பு முறை பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

உள்ளூரில் தயாரிக்கக் கூடிய இந்தச் சிமெந்தினால் வீடுகளுக்குத் தரை இடும் பரீட்சார்த்த வேலைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அங்கு நின்ற தேச நிர்மாணி ஒருவர் தெரிவித்தார்.

கைத்தொழில் பிரிவில் யாழ். காமாட்சி இரும்பு ஆலையில் தயாரிக்கப்பட்ட தெளிக்கும் கருவி, கத்திகள், இருவழிக் கைப்பம்பி போன்ற பலவித பொருள்கள் காணப்பட்டன.

கண்காட்சியின் மற்றொரு பகுதியில் ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகத்தின் உற்பத்திகள் காணப்பட்டன தைக்கப்பட்ட ஆடைகளும், கைப்பணிப் பொருள்களும் கண்கவர் விதத்தில் காட்சி அளித்தன

பனை, தென்னை வள ஒன்றியம், பனை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் தயாரிப்புக்கள் வைக்கப்பட்டிருந்த பகுதியில் பிஸ்கட்டுக்களும் விதம் விதமான இனிப்பு வகைகளும் காணப்பட்டன. ருசித்துப் பார்த்தபோது கொழும்புச் சரக்கைவிடச் சுவையாக இருந்தன.

அன்னை தொழிலகம், மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், பவானி ஸ்ரோர்ஸ், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், முறைசாராக் கல்விப் பிரிவு, மூளாய் சிறுவர் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலை, வாழைநார்ப் பட்டுக் கைத்தொழில் பயிற்சி நிலையம், செவிப்புலனற்றோர் கைத்தொழிற் பேட்டை, அனிதா பாடசாலை, சமுத்திரா உற்பத்திகள், தீவுப்பகுதி உழைக்கும் மகளிர் நிறுவனம், சிவகாமி அம்பாள் மகளிர் குழு, சுய தொழில் வேலைவாய்ப்பு நிறுவனம், நியூ சந்திரா தொழிலகம், தாவாந்துறை எட்வேர்ட் அன்ரன் வாடி போன்ற நிறுவனங்களின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியில் பார்வைக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டிருந்தன.

### திட்டப் பிரிவு

கண்காட்சியின் ஓரிடத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் திட்டப் பிரிவுக்குள் நுழைந்தோம்.

தமிழீழத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயற்படுத்தப்படும் சுமார் 210க்கும் மேற்பட்ட திட்டங்களை விளக்கும் வரைபடங்கள், புள்ளி விவரங்கள் என்பன அங்கு காணப்பட்டன.

பொருளாதார அபிவிருத்தியையும், அதே சமயம் வேலை வாய்ப்புக்களையும் இலக்காகக் கொண்டே பெரும்பாலான திட்டங்கள் வகுக்கப்படுவதாக அங்கு நின்றிருந்த ஆய்வு நிறுவனப் பெண் பிரதிநிதி ஒருவர் விளக்கினார்.

சேவை நோக்குத் திட்டங்கள், நீண்டகால, குறுகிய காலத் திட்டங்கள், கால்நடை அபிவிருத்தி என மற்றும் முக்கியமான வேலைத் திட்டங்கள் பற்றி அவர்கள் அங்கு விளக்கமளித்தனர்.

### இராட்சத பீற்றூட்!

யாழ். மண்ணில் விளைந்த நிறை கூடிய (ஒன்றரைக் கிலோ) பீற்றூட் கிழங்கு ஒன்று எங்கள் கண்களை தன்பக்கம் இழுத்தது.

அப்போது நாங்கள் ஆய்வு நிறுவனத்தின் விவசாயப் பிரிவில் நின்றுகொண்டிருந்தோம்.

தமிழீழ மண்ணில் தற்போது செய்கை பண்ணப்படும் புதிய இனப் பயிர்கள் அங்கு காணப்பட்டன.

ஒரு காலத்தில் தென்னிலங்கைக்கே உரியவை எனக் கருதப்பட்ட பல பயிரினங்கள் தற்போது எமது மண்ணில் பயன் தந்து சாதனை புரிந்துள்ளன என்கிறார் விவசாயப் பிரிவைச் சேர்ந்த அலுவலர். அது உண்மையே என்பதை நேரில் அறிந்துகொண்டோம்.

பெரிய நிலப்பரப்பில் தற்சமயம் கஜு செய்கை பண்ணப்படுகிறது, பஷன் பழம் ஒரு ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டுள்ளது. அரேரட் கிழங்குச் செய்கை எதிர்பார்த்ததைவிட அதிக பயனைத் தந்துள்ளது.

இவை தவிர மல்லி, சீரகம், பூடு போன்றவையும் தற்சமயம் ஆய்வு நிறுவனப் பண்ணைகளில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டுள்ளன. அவையும் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

விவசாயப் பிரிவில் காணப்பட்ட பழவகைகளில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பாங்கொக் இனத்தைச் சேர்ந்த — சுமார் ஒரு கிலோ நிறை உடைய — கொய்யாப் பழத்தைப் பார்த்து ரசிக்காத, கற்பனையில் ருசிக்காத பார்வையாளர்கள் எவருமே இருக்க முடியாது!

மாம் பூக்களைத் தாக்கும் மாவிலைத்தத்தி எனப்படும் பூச்சி இனத்தை அழிக்கப் பயன்படுத்தப்படும் தெளி கருவியின் மாதிரி அமைப்பும் விவசாயப் பிரிவில் காணப்பட்டது.

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் பயிரினங்களின் விதைகளையும் — அவை பற்றிய விளக்கங்களையும் பெற்றுக் கொள்ள தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு விவசாயப் பிரிவினர் — ஆர்வமுள்ளவர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

### ஐயகோ! வனவளமே!!

விவசாயப் பிரிவின் சூழல் பராமரிப்புப் பகுதியில், கண்காட்சிக்கு வந்தவர்களை எச்சரிக்கும் வகையில் புள்ளி விவர அட்டவணை ஒன்று காணப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 1950 ஆம் ஆண்டு 28 வீதமாகக் காணப்பட்ட மொத்த வன வளம் 1991 இல் 15 வீதமாகக் குறைந்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இதே காலப் பகுதியில் அது 32 வீதத்தில் இருந்து 20 வீதமாகக் குறைந்துள்ளது!

விவசாயப் பிரிவுக்குள் நுழைந்த போது வாயிலில் காணப்பட்ட சுலோகம் ஒன்றை அங்கிருந்து திரும்பும் போது மீண்டும் ஒரு தடவை பார்த்து நினைவில் நிறுத்திக் கொண்டோம்.

'' தமிழீழ நிலமெங்கும் தரிசின்றிப் பயிர் செய்தால் பல நாட்டின் பசி தீரும் '' என்பதே அந்தச் சுலோகம்.

வாழை நாரில் அழகான கால் செருப்புக்கள் தயாரிக்கப்பட்டு கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

அவற்றில் ஒன்றுகூட இது வரை விற்பனையாகவில்லை. ஆனாலும் அதனை அறிமுகப்படுத்தும் ஆர்வம் குறைந்துவிடவில்லை என்கிறார் வாழைநார் பட்டுக் கைத்தொழில் பகுதியைச் சேர்ந்த ஒரு பெண்.

ஆய்வு நிறுவனத்தின் சக்திப் பிரிவு, கடற்றொழில் பிரிவு, கைத்தொழில் பிரிவு, வர்த்தகப்பிரிவு, கால்நடைப் பிரிவு போன்ற ஏனைய பிரிவுகளின் உற்பத்திகளும், கண்டுபிடிப்புக்களும் கண்காட்சியில் தனித்தனிப் பிரிவாக வைக்கப்பட்டிருந்தன.

கண்காட்சியைப் பார்வையிட வந்த சிறுவர்களையும், பெரியோர்களையும் கவர்ந்த குறிப்பிடக்கூடிய மற்றொரு அம்சம் உள்ளூர் உற்பத்தி பற்றிய 'பொம்மலாட்ட நிகழ்ச்சி'.

ஆய்வு நிறுவனத்தின் யாழ். மாவட்டப்பிரிவு, அந்தப் பொம்மலாட்ட நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கியது.

மூன்று நாட்களாக இடம் பெற்ற கண்காட்சியில், உற்பத்திப் பொருள்களின் விற்பனை சிறப்பாக இருந்தது. உள்ளூர் உற்பத்திகள் மீது மக்கள் கொண்டுள்ள ஆர்வம் முன் எப்போதும் இல்லாத வகையில் இந்தக் கண்காட்சியில் அவதானிக்க முடிந்தது!

அது தொடர்ந்தால், வளர்ந்தால் நாமே எமக்கு அரசர்களாகி விடுவோம்! எவர் தயவையும் நம்பியிருக்க வேண்டியதில்லை. ★

# ஐ. தே. கட்சியிலிருந்து மேலும் சில அரசியல்வாதிகள் விலகலாம்!

## ஜனாதிபதியே கூறுகிறார்

கொழும்பு, ஏப். 1

தேர்தல் நெருங்கி வரும் தருணம் பார்த்து ஆளும் கட்சியில் இருந்து வெளியேற மேலும் சில அரசியல்வாதிகள் திட்டமிட்டு வருகின்றனர்.

இத் தகவலை ஜனாதிபதி பிரேமதாஸாவே மொனறாகலை மாவட்ட ஐ. தே. க. மாநாட்டில் பேசுகையில் வெளியிட்டார்.

அவர் அது பற்றி மேலும் சொன்னதாவது;

சில 'காட்டு [illegible] கட்சியில் இருந்து [illegible] யேறத் திட்டமிட்டு வருவதாகப் பேச்சடிபடுகின்றது.

எமது கட்சியில் உள்ள சுரண்டல்காரர்கள் எல்லாம், அப்பாவிகளை இரையாக்கும் 'கழுகு'களுடன் சேர்ந்து கொள்வது குறித்து எனக்கு கவலை இல்லை.

சுரண்டல்காரர்கள் விஷயத்தில் புதிய ஐக்கிய தேசியக் கட்சி இனி சூடாகவே நடந்து கொள்ளும்.

மக்களைச் சுரண்டுபவர்கள், பொதுச் சொத்துக்களைச் [illegible] சுரண்டுபவர்கள் எல்லாம், இனம் இனத்தோடு சேரும் என்ற பழமொழிக்கு ஏற்ப ஒன்றாகத் திரளுகின்றார்கள்.

நாட்டில் உள்ள அரசியல் சக்திகள் இரண்டு அணிகளாகத் திரண்டு வருகின்றன ஓர் அணி, சுரண்டல்காரர்கள் அணி. இரண்டாவது அணி சுரண்டாதவர்கள் அணி.

சுரண்டாதவர்கள் அணியே எனக்கும் கட்சிக்கும் விசுவாசமாக உள்ளது. மக்களை நான் நடுத்தெருவில் விட்டுச் செல்லமாட்டேன்.

வெகுவிரைவில் நான் சிறைக்கதவின் பின்னால் இருப்பேன் என்று ஒருவர் ஆரூடம் கூறினார். ஆனால் அவரே பின்னர் சிறைக்கம்பிகளின் பின்னால் இருந்தார். என்னை வெளியேற்ற முயற்சித்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு திரு பிரேமதாஸா கூறினார்.

(இ-எ)

### கருத்தரங்கு

அச்சுவேலி தெற்கு. இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளையின் சார்பில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று அண்மையில் மேற்படி காரியாலயத்தில் திரு க சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது

கோப்பாய் சுகாதார அதிகாரி வைத்திய கலாநிதி எம். லோகவினாயகம் மற்றும் சுகாதாரப்பகுதி அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரம் என்று நினைத்து விழுங்கியது போதைவஸ்து!

## விமான நிலையத்தில் அம்பலம்

கொழும்பு, ஏப். 1
300 கிறாம் ஹெறோயின் போதை வஸ்தைக் கடத்தி வந்த இந்தியர் ஒருவரை கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகள் பிடித்தனர்.

அந்த நபர் ஹெறோயினை 65 சிறு பைக்கெட்டுக்களில் அடைத்து விழுங்கியிருந்தார்.

சென்னையில் உள்ள இலங்கைத் தமிழ்ப்பெண் ஒருவர் அப் பைக்கெட்டுகளைத் தந்ததாகவும் அவற்றினுள் அமெரிக்க வைரம் இருப்பதாக மட்டுமே அவர் கூறினார் என்றும் கைதான கண்ணுச்சாமி செல்லன் என்ற (வயது 29) அந்த நபர் விசாரணையின் போது தெரிவித்தார்.

அந்த நபர் போதைவஸ்து தடுப்புப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## கனடா உதவி

இலங்கையில் இந்த ஆண்டு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் கமிட்டி மேற்கொள்ளவிருக்கும் பணிகளுக்காக 2 கோடி 50 லட்சம் ரூபாவை வழங்கப்போவதாக கனடா அரசாங்கம் அறிவித்துள்ளது.


# புதுவருட மலிவு விற்பனை

## இவ் அரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்.

★ சைனா சித்தை 36''
★ சித்தை 36''
★ பலஸ் மஞ்சள் 44''
★ சில்க் பொலிஷ்ரர் 36''
★ Hybro சேட்டிங் 36''
★ பேபி சூட்
★ சோட்ஸ்
★ பூணம் சாறி

புதுவருட தினத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மல்வு விலையில் புடைவைகளை வழங்கும் ஒரே ஸ்தாபனம்

த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
[பாரதியார் சிலைக்கு அருகாமையில்]
156, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[20309]


## கிருகயக்ஞ நினைவுநாள்



திருமதி சோ. அமுதாம்பிகை அம்மா

தோற்றம்: 14-9-33 மறைவு: 21-3-92

அம்மா அவர்கள் பிரசோற்பத்தி பங்குனி அபர திருதிகையில் 20-3-92 அன்று தேக யோகமாயினர் வாழ்வாங்கு வாழ்ந்த அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

இங்கனம்:
கணவர்: சி. சோமசுந்தரசர்மா
பிள்ளைகள்: சோ. ஜெகதீஸ்வரி. ரவிச்சந்திரன் ஜெயராமசர்மா, தீபதர்சனன்

கன்னாகம்:
1 4-92
[20311]

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம் -ஏப்.1
தியாக தீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு தொடர்பாக இடம்பெற்றுவரும் உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று புலோப்பளை கல்வி வளர்ச்சிக் கழகத்தில் நடைபெறும். (த-117)

## இன்று

யாழ்ப்பாணம் -ஏப்.1
''தாவர சாகிய அழிவும் மனித வாழ்வும்'' என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக் கழக புவியியல் விரிவுரை மண்டபத்தில் நடைபெறும். யாழ் பல்கலைக் கழக புவியியற் கழகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

★ ★ ★

யாழ். பல்கலைக் கழக நுண்கலைத் துறை கலைவட்டம் ஏற்பாடு செய்துள்ள ''இன்றைய தமிழ்க் கவிதை'' என்னும் தலைப்பிலான சொல்லாடல் நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3மணிக்கு பல்கலைக் கழக கலைத்துறை அரும்பொருள் காட்சியகத்தில் நடைபெறும்.

★ ★ ★

அன்னை பூபதி நினைவாக அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் இன்று இத்தாவில் அம்மன் கோவிலில் நடைபெறும்.

★ ★ ★

நல்லூர் பிரதேச மட்டத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் நடத்தப்பட்ட வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரும்பராய் பிரதேச மட்டத்தில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நாளை வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறும். [இ]

## 3 மாதங்களில்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
எல்லைப்பகுதிகளில் படையினர் ''ஹயபாற''; ''வன்னி விக்ரம'', 'கிறின் பே'', ''றேசர்'', ''கிழக்கு துண்டாட்டம்'' என்னும் பெயர்களில் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளை புலிகள் தீரமுடன் முறியடித்தனர்.

இத்தகவல்களை விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் வெளியிட்டன. [உ-3]

## வடபகுதி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி[
அறிவித்தல் எதுவும் இல்லாமல் படையை விட்டு விலகியவர்களும் முன்னணிப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களே.

இந்த நிலையில் வடக்கு - கிழக்குப் போர் முனைகளில் முன்னுக்கு நின்று போராட துருப்புகள் முன்வரமாட்டா என்று அவதானிகள் கருதுகிறார்கள்.

வடக்கு — கிழக்குப் போர் முனைகளில், விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களில் உயிரிழக்கும் படையினரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருவதால் மீண்டும் போர் முனைக்குச் செல்லத் துருப்புகள் மறுத்து வருவதை பாதுகாப்புப் படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் அதிரடித் தாக்குதல்களுக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் புதிய யுத்த தந்திரோபாயங்களையும், யுத்திகளையும் பாதுகாப்பு உயர் அதிகாரிகள் சிந்தித்து வந்தாலும் —

மன அயர்வும், விரக்தியும், உயிர்ப் பயமும் ஏற்பட்டுக் குழப்பம் அடைந்துள்ள துருப்புகளைக் கொண்டு புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்துவது மிகவும் கடினமான காரியம் — என்று அவதானிகள் தெரிவித்திருக்கிறார்கள். [அ-எ]

# விபத்துகளில் படுகாயம்

வீதி விபத்துகளில் படுகாயமடைந்த ஐவர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

எழுதுமட்டுவாளில் நேற்றுப் பிற்பகல் 3 30 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக்கொண்டதில் மூவர் படுகாயமடைந்தனர்.

மந்திகையைச் சேர்ந்த சண்முகநாதன் நேசராசா [வயது 31], வரணியைச் சேர்ந்தவர்களான கணபதிப்பிள்ளை அருளானந்தம் [வயது 43], சின்னக்குட்டி செல்வரத்தினம் [வயது 35] ஆகியோரே படுகாயமுற்றனர்.

நேற்று நண்பகல் நல்லூர் சட்டநாதர் கோயில் வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் மணிமாறன் [வயது 13] என்ற சிறுவன் படுகாயமடைந்தான். இச்சிறுவன் சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளான்.

இதேசமயம் சைக்கிள் விபத்தொன்றில் தலையில் படுகாயமடைந்த ஒருவர் கடந்த மூன்று நாட்களாக சுயநினைவிழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்.

கடந்த சனிக்கிழமை நெடுங்கேணி தட்டுவான் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் காயமுற்ற — அதே இடத்தைச் சேர்ந்த — கிருஷ்ணபிள்ளை சுப்பிரமணியம் [வயது 35] என்பவரே அவராவார்.

# இலங்கைக்கு ஆயுதம்.....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தும் உடன்படிக்கையில் காணப்படும் பலவீனத்தைப் பயன்படுத்தி, - அழிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ஆயுதங்களை மலிவான விலையில் வகைப்படுத்தி விற்கவும் முயற்சிக்கப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது.

செக்கோஸ்லேவாக்கியா ஏற்றுமதி செய்யவுள்ள ஆயுதங்களில் ஆயிரத்து 600 டாங்கிகள், ஆயிரத்து 900 கவச போர் வாகனங்கள் மற்றும் ஆயிரத்து 900 ஆட்டிலறி ஆயுதங்கள் ஆகியன அடங்குகின்றன.

மேலதிக ஆயுதங்கள் மலிவான விலையில் கிடைக்கும் வாய்ப்பு திடீரென்று ஏற்பட்டிருப்பது இலங்கைப் பாதுகாப்பு படையினரை நவீனமயப்படுத்தி விரிவாக்க அருமையான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது என்றும் —

இதற்கான செலவீனத்தை தாங்கும் சக்தி நாட்டுக்கு இருக்குமானால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆயுதவிற்பனை மூன்றாம் தரப்பினர் அல்லது தனியார் நிறுவனங்கள் மூலம் நடத்தப்படுவதாகவும்—

அதனால் மேலதிக ஆயுதங்கள் கள்ளத்தனமான முறையில் விடுதலைப்புலிகள் போன்ற கெரில்லாக் குழுக்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பு இருக்க முடியும் என்றும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி ஆயுதச் சந்தையில் 'சாம்' ஏவுகணைகள் போன்ற விமான எதிர்ப்பு ஆயுதங்களை விடுதலைப் புலிகள் வாங்கக்கூடும் என்றும் அவ் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

விற்பனைக்கு விடப்பட்டுள்ள ஆயுதங்கள் மிகவும் நவீன மயமானவையாக இல்லாவிடினும், அவை மூன்றாம் உலக நாடுகளில் படைகளைக் கட்டி எழுப்பப் போதுமானவை என்றும் அவ்வட்டாரங்க தெரிவித்தன. [உ-எ]

# மரண அறிவித்தல்கள்

## இராமலிங்கம் சுப்பையா

நாரந்தனையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற லிகிதர் இராமலிங்கம் சுப்பையா நேற்று [31-03-92] காலமானார்.

இவர் அருபவதியின் அன்புக் கணவரும், சோமசுந்தரம் [ஓய்வு பெற்ற அதிபர், மலேசியா], காலஞ்சென்ற பொன்னையா மற்றும் துரைசாமி [இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்], கனகரத்தினம் [இளைப்பாறிய ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவபரமானந்தன் சதாரூபவதி [S.S.O, ஊர்காவற்றுறை], சரோஜா [France], Dr. இரத்தினேஸ்வரன் [U. K], தயாநதி [U. K] ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [01-04-92] காலை 9. 00 மணியளவில் இல. 5 றக்கா வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இல. 5, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (20313)
தகவல்:
இ. கனகரத்தினம்

## திருமதி சு. சிவக்கொழுந்து

திருநெல்வேலி, காளி கோவிலடியைச் சேர்ந்த திருமதி சு. சிவக்கொழுந்து காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற M. R. சுப்பிரமணியம் [பாதை முகாரி, புகையிரத இலாகா] அவர்களின் அன்பு மனைவியும், சந்தானலட்சுமி, ஜெகதாம்பிகை [மலேசியா], சாவித்திரி [ஜேர்மனி], செந்தில்மணி ஆகியோரின் அன்புத் தாயாரும், த. நடராஜா [தொழில் செயலகம், நாரெஹென்பிட்டி], அ. சுந்தரமூர்த்தி [மலேசியா], நா. தேவதாஸ் [ஜேர்மனி], நா. சிவராமன் [தொ. நு. உத்தியோகத்தர், வேலணை பிரதேச சபை] ஆகியோரின் அன்பு மாமியாரும், உமாதேவி, கதிர்காமநாதன் [கனடா], ஜெயமாலினி, யசோலினி [மலேசியா], தனுஜா, சாரண்யா [ஜேர்மனி], செந்தூரன், லாவண்யா, நவதாசன் [கனடா] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், திருமதி செல்லம்மா, திருமதி அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 1-4-92 முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலி இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல் :
நாவலடி ஒழுங்கை,
திருநெல்வேலி மேற்கு.
நா. சிவராமன்
[20314]

இப்பத்திரிகை நியூ - தமிழ் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 1-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org